*1*

# கலங்கிய இருதயங்களுக்குத் தைலம்

## (யோவான் 14)

*" 'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லா திருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்' " (வசனங்கள் 1-3).*

இயேசு தமது அப்போஸ்தலர்களை விட்டுச் செல்ல இருந்ததாக அவர்களிடம் கூறியிருந்தார். "என் பிதாவினிடத்தில் செல்வதற்கு வேளை வந்துள்ளது" என்று அவர் விளக்கப்படுத்தினார் (காண்க 14:12). இந்தச் செய்தி அவர்களுக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. அவரது பூமிக்குரிய பிரசன்னத்தின் மீதான நம்பிக்கையை அவர்கள் வளர்த்திருந்தனர். அவருடன் இருக்கையில் அவர்கள் மனதைரியத்தை உணர்ந்தனர். அவர் இல்லாத நிலையில் அவர்கள் திகைப்படைந்தனர். அமைதியை முறித்தலுக்காகத் தொடர்ந்து பேதுரு, "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர்?" என்று அவரிடம் கேட்டார். அவருக்கு, "நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய்" என்று பதில் கூறப்பட்டது (13:36). அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்ள இயலாத நிலையில் பேதுரு, "ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்று எதிர் உரை கூறினார். அதற்கு இயேசு செயல் விளைவில், "இல்லை, நீ அவ்வாறு செய்ய மாட்டாய். இந்த இரவு முடிவதற்குள் நீ என்னை மறுதலிப்பாய்" என்று கூறினார்.

இயேசுவின் வார்த்தைகள், அவரது அப்போஸ்தலர்களின் இருதயங்கள் மீது நசுக்கும் வலிமையுடன் வந்திறங்கின. இந்த உரையாடல் மற்றும் யூதாஸ், பேதுரு ஆகியோரைப் பற்றிய இயேவின் முன்னுரைத்தல் (காண்க 13:21-38) ஆகியவை முழுவதிலும், அப்போஸ்தலர்கள், பயம் மற்றும் இருள்சூழும் நினைவு ஆகியவற்றினால் தங்களை நிரப்பிய குழப்பமூட்டும் உணர்ந்தறிதல்கள் காரணமாக இருதயத்தில் குத்தப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் இயேசுவைக் காட்டிக்கொடுப்பார் என்ற அதிர்ச்சியினாலும், இயேசு தமது பிதாவின் அருகில் இருக்கப் பிரிந்துசெல்லுதலினாலும், அப்போஸ்தலிக்கக் கட்டில் முதன்மையாகப் பேசியவரான பேதுருவின் மறுதலிப்புக்கள் பற்றிய முன்னுரைத்தலினாலும், அவர்களின் ஆவிகள் கலங்கின.

அந்த இரவின் இருளானது அவர்களின் இருதயங்களில் பிரவேசித்து

*இருந்தது. அவர்களுக்கு மறு உறுதிப்பாடு அளிக்கும் வெளிச்சம் தேவையாயிருந்தது. திகைப்புற்றிருந்த அவர்களின் ஆத்துமாக்களை இயேசு எவ்வாறு அமைதிப்படுத்தினார்? அவர்களுக்கு அவர் கொடுத்தது எதுவோ அதை அவர் நமக்கும் கொடுக்கிறார் என்று நாம் நம்ப முடியும்.*

## தழுவிக்கொள்ள ஒரு விசுவாசம்

*தழுவிக்கொள்ள ஒரு விசுவாசத்தை அவர்களுக்கு அவர் அளித்தார்.* அவர்கள் தேவன்மீதும் தம்மீதும் விசுவாசம் கொள்ளும்படி அவர் கேட்டுக்கொண்டார். அவர்களுக்கு அவர் இரு கட்டளைகளைக் கொடுத்தார்: *"தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்"* (14:1; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இது அவர்கள் சந்தேகம் கொள்வதற்கான வேளையாக இருக்கவில்லை; இது அவர்கள் நம்பிக்கை வைத்தலுக்கான வேளையாக இருந்தது. அவர்கள் முழுவதும் புரிந்துகொள்ளக் கூடாது இருக்கலாம்; ஆனால் தேவனும் இயேசுவும் யாராக இருக்கிறார்கள் என்று அவர்கள் அறிந்துள்ளதன் வெளிச்சத்தில், அவர்கள் விசுவாசம் கொண்டிருக்க முடியும். பின்னோக்கிக் கண்ணோக்கினால் அவர்கள், தாங்கள் ஏமாற்றப் பட்டிருந்ததாக ஒரே ஒரு வேளையைக்கூடக் காண முடியாதிருந்தது. அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தவை நிறைவேற்றப்பட்டிருந்தன. தேவனும் கிறிஸ்துவும் கடந்த காலத்தில் அவர்களை வழிநடத்தி அவர்களுக்கு அருளி இருந்தனர் மற்றும் அவர்களுக்கு முன்னால் காத்திருந்த இரவின் திகிலின் ஊடே அவர்கள் செல்லும்போது அவர்களுக்கு அவற்றையே செய்யத் தொடருவார்கள்.

இருளான இரவின் நிழல்கள் நம்மைச் சுற்றிச் சூழும்போது - பதில்கள் சிலவாகவும் நமது கண்களில் உள்ள கண்ணீர்களின் காரணமாக எதிர்காலம் தெளிவற்றதாகவும் இருக்கும்போது - நாம் தொடர்ந்து விசுவாசிக்க வேண்டும். நம்மை எதிர்கொள்ளும் வனாந்தரத்தின் ஊடேயுள்ள வழியைத் தேவன் அறிந்திருக்கிறார்; நாம் இயேசுவைப் பற்றிக்கொள்ளும்போது, அவர் நம்மைப் பற்றிக்கொள்வார்.

## முன்னதாகக் காண்பதற்கு ஒரு எதிர்காலம்

*இயேசு அவர்களுக்கு முன்னதாகக் காணும் ஒரு எதிர்காலத்தைக் காண்பித்தார்.* பரலோகத்தின் குடியிருப்புகளில் வாழ்வதை முன்னெதிர் பார்க்கும்படி அவர்களுக்கு அவர் கூறினார். விசுவாசி கொண்டுள்ள வனப்புமிகுந்த எதிர்காலத்தை அவர் சுட்டிக்காண்பித்தார். அவர், "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்று கூறினார் (14:2, 3அ). நாம் சென்று குடி அமர்வதற்குப் பல குடியிருப்புகளைத் தயார் செய்யும்படிக்கு இயேசு தமது பிதாவின் வீட்டிற்குச் சென்றார். எல்லாருக்கும் அங்கு இடம் இருக்கும் என்பது அவரது மறுஉறுதிப்பாடாக உள்ளது. ஏற்ற காலத்தில் அப்போஸ்தலர்கள் அவரைப் பின்தொடருவார்கள்;

மற்றும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஏராளமான இடம் இருக்கும்.

கடினமான வேளைகள் நமக்கு, இந்த உலகம் நித்திய குடியிருப்பிற்கான இடம் அல்ல என்பதை நினைவூட்ட வேண்டும். நாம் இங்கு சிலகாலம் இருந்து பின்பு கடந்து செல்லுகிற திருப்பயணிகளாக, ஊழியக்காரர்களாக இருக்கிறோம். "நாம் பரலோகத்திற்குச் செல்ல முயற்சி செய்யும் இந்த உலகத்துக் குடிமக்களாக இராமல், இந்த உலகத்தினூடே கடந்து செல்ல முயற்சி செய்யும் பரலோகத்துக் குடிமக்களாக இருக்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது. நமது நித்திய இல்லத்தின் உருவகத்தை விசுவாசத்தினால் நமது மனங்களில் உறுதியாக ஊன்றாத வரையிலும், பூமிக்குரிய நமது துன்பங்களையும் விரோதிகளையும் எதிர்கொள்ள இயலாதவர்களாக இருக்கிறோம்.

## எதிர்பார்க்க ஒரு ஐக்கியம்

*எதிர்பார்க்க ஒரு ஐக்கியத்தை இயேசு கொடுத்தார்.* வரவிருந்த மறு ஒன்றிப்பில் மகிழ்ச்சி கொள்ளும்படி அவர் கூறினார். அவர் தமது அப்போஸ்தலர்களிடம், அவர்களின் பிரிவானது என்றென்றைக்குமானதாக இராது என்று நினைவூட்டினார். அது தற்காலிகமானதாக மாத்திரமே இருந்தது. அவர் தாம் இருக்கும் இடத்தில் அவர்களும் இருக்கும்படிக்கு, தாம் செல்லும் அதே இடத்திற்கு அவர்களையும் கூட்டிச்செல்வார்.

பரலோகத்தின் நம்பிக்கையில் அடங்கியுள்ள ஐக்கியத்தை நாம் நினைவுகூரும்போது, அந்த நம்பிக்கையானது இன்னும் அதிகம் பிரகாசமாகிறது. நாம் ஒரு இடத்திற்கு மாத்திரம் சென்றுகொண்டிருக்கவில்லை; நாம் ஒரு மறு ஒன்றிப்பிற்குச் செல்கிறோம். மறு ஒன்றிப்பின் மதிப்பானது, அது எங்குள்ளது என்பதில் அல்ல, ஆனால் அங்கு யார் உள்ளார் என்பதிலேயே காணக்கிடக்கிறது. நமது மனங்கள் புரிந்துகொள்ள இயலாத ஒரு வனப்பு, பரலோகத்தில் அடங்கியுள்ளது; ஆனால் அங்கு மகிழ்வுடன் அனுபவிக்கப்பட உள்ள ஐக்கியமானது அதன் வனப்பை இரட்டிப்பாக்கி மற்றும் மறு இரட்டிப்பாக்குகிறது. யோவான் பின்வருமாறு எழுதினார்:

> *மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது (வெளிப்படுத்தின விசேஷம் 21:3, 4).*

தேவனே நமது கண்ணீர்களைத் துடைக்கும் அளவுக்கு நாம் தேவனுடன் மிக நெருக்கமாக இருப்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

## முடிவுரை

நாட்கள் இருளாகும்போது, நமது இருதயங்கள் இளைப்படைந்து திகைப்படையும்போது, நமது ஆவிகள் பெற ஏங்கும் ஊக்குவித்தலைப்

பெற நாம் எங்கே செல்ல முடியும்? "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று கூறி, இயேசு தம்மிடத்தில் வரும்படி நம்மை அழைக்கிறார். அவரது உண்மைத்தன்மையில் நாம் விசுவாசம் கொள்ளும்படியும், இரட்சிக்கப் பட்டவர்களுக்காக அவர் வைத்துள்ள எதிர்காலத்தை நாம் முன்னெதிர் நோக்கும்படியும், வரவிருக்கும் ஆச்சரியமான ஐக்கியத்தில் நாம் மகிழ்ச்சி அடையும்படியும் அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

ஏரேமியா, ''கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?" என்று கேட்டார் (ஏரேமியா 8:22). அவரது வார்த்தைகளைச் சற்றே மாற்றி, நாம் "கலங்கிய இருதயங்களுக்குத் தைலம் இல்லையோ? காயப்பட்ட ஆவியைக் குணமாக்கக் கூடிய இரணவைத்தியனும் இல்லையோ? தேவனுடைய மக்கள் வருத்தம் மற்றும் கவலையில் இருந்து தங்களை விலக்கிக் கொள்ளக் கூடாது போனது எவ்வாறு?" என்று கேட்போமாக. இந்தக் கேள்விகளுக்குப் பதில் என்பது புரிந்துகொள்ளப் படக்கூடியதாக உள்ளது; அது ஒரே வார்த்தையாக உள்ளது: "இயேசு"! அவரே நமக்குத் தைலமாக இருக்கிறார், அவரே நமது மாபெரும் வைத்தியராக இருக்கிறார். அவர் எந்தத் திருப்பயணிக்கும் எந்தக் காலத்திற்கும் தேவையான எல்லா நம்பிக்கையையும், புத்துணர்வையும் மற்றும் ஊக்குவித்தலையும் தருகிறார். அவர் மீது நாம் கொண்டிருக்கும் ஜெயம்கொள்ளும் விசுவாசம், அவர் மூலம் நாம் கொண்டிருக்கும் ஒருக்காலும் ஒழியாத எதிர்காலம், மற்றும் அவருடன் நாம் கொண்டிருக்கும் இனிமையான ஐக்கியம்: இவைகள் நம்மை நிலைநிறுத்துகின்றன! நாம் இவை யாவற்றையும் மற்றும் பரலோகத்தையும்கூடக் கொண்டிருக்கிறோம்!

---

*"வழியின்றி பயணம் இல்லை; சத்தியமின்றி அறிதல் இல்லை; உயிரின்றி வாழுதல் இல்லை. நானே பின்பற்ற வேண்டிய வழியாகவும், நம்பிக்கை வைக்கப்பட வேண்டிய சத்தியமாகவும், நம்பி எதிர்பார்க்கப்பட வேண்டிய ஜீவனாகவும் இருக்கிறேன்.*

*"நானே மீறக்கூடாத (ஒருக்காலும் கனவீனப்படுத்தக்கூடாத) வழியாக, வழுவாத சத்தியமாக, முடிவற்ற வாழ்வாக இருக்கிறேன்.*

*"நானே மிக நேரான வழியாக, மிக மேன்மையான சத்தியமாக, உண்மையான, ஆசீர்வதிக்கப்பட்ட, படைக்கப்படாத ஜீவனாக இருக்கிறேன்.*

*"நீங்கள் என் வழியில் நிலைத்திருந்தால், நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும், நீங்கள் நித்திய ஜீவனைக் கொண்டிருப்பீர்கள்."*[1]

---

குறிப்பு

[1]Thomas à Kempis, *Of the Imitation of Christ* (New Canaan, Conn.: Keats Publishing, 1982), 237-38.